# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:7 Issue :27 July 2025*

கோட்டை:7 வாயில்:27 ஜூலை 2025

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages, Faculty of Arts, Banaras Hindu University,Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of Tamil, Institute of Languages, Literature& culture, Visva – Bharathi University,Santiniketan,West Bengal, India -731235

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr SILLLALEE A/L S.KANDASAMY**

Assistant Professor University Tunku Abdul Rahman (UTAR), Sungai Long, Cheras, Selangor, Malaysia. sillalee@utar.edu.my

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr N.MUTHUMANI**

Principal, PPG College of Arts And Science,Coimbatore - 641035.

**Dr KANDASAMY**

Asst Professor Department of History, Rajus college Rajapaalayam Madurai Tamil nadu herostone78@rrc.edu.in

**Dr S. KARUMPAAYIRAM**

Junior Research officer,Central Institute of Classical Tamil,Chennai-600100

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## EDITORIAL BOARD

**Dr S.KANNADASAN**

Assistant Professor,Tamil Department,The Madura College, Madurai.
Kannadasan@maduracollege.edu.in

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

**DR G.UMAMAHESWARI**

Asst professor and Head , Department of Tamil , P. K. R Arts college for women , Gobichettipalayam , Erode (Dt) , umag@pkrarts.org

**Dr CHANDRAKALA**

Asst Professor and Head, Department of Tamil , PPG college of Arts and Science, Coimbatore - 641035.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**

**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# அகத்தினுள்

குறுந்தொகைப் பாடல்களில் உளவியல் பகுப்பாய்வு அணுகுமுறை
முனைவர் இரா.ஜெய்சங்கர்

புறநானூற்றுப் பாடல்களில் ஔவையாரின் ஆளுமைத்திறன்
முனைவர் அ.சேமலா வசந்தா

ஐங்குறுநூற்றில் பாணர்
தே. சுதா

தொல்காப்பியம் காட்டும் நிறக்கோட்பாடுகள்
க.சுவாதி

சங்க இலக்கியங்கள் சுட்டும் களவு கோட்பாடுகள்
ஏ. தீபா

சிலம்பில் இயற்கை
க. மங்கையர்க்கரசி

மணிமேகலையில் மனிதநேயம்
பெ. ஜோதி,

இலக்கியங்களில் விருந்தோம்பல் பண்பு
முனைவர் ஏ.சித்ரா

பண்டைய தமிழர்களின் மணமுறைச் சடங்குகள்
முனைவர் கி.சரண்யா

ஆற்றுப்படைகலைஞர்களின் அறம்
கு. சிந்து

பண்டைகாலத்து தமிழக மக்களின் வாழ்க்கைமுறை
ம. துர்க்காதேவி

ஒரு சொல் பல பொருள் - வேர்ச்சொல் வழி விளக்கம் அறிதல்
முனைவர் ஆ. செந்தமிழ்க்கோதை

வள்ளுவர் கூறும் வாழ்வியல் அறம்
முனைவர். நா. ஹேமமாலதி

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**தமிழர் நிலத்தில் பாலையும் ஒட்டகமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**தமிழ் மொழியில் வெளிப்படும் கணிதவியல் கூறுகள்**
முனைவர்.அ.ரேவதி

**தமிழர் மரபும் வாழ்வியலும்**
பொ. அகத்திய பாலா

**தமிழ்ச் சமூகத்தில் நாட்டுப்புறத் தெய்வங்கள்**
முனைவர் வ.மோகனப்பிரியா

**பெரியபுராணத்திற்கு அணிசெய்யும் சிலேடையணி**
வே.வெ.சுஜாதா

**கூற்றுகளில் மெய்ப்பாடு புலப்படும் விதம்**
மேபல் சுபிதா த.

**பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் அவர்தம் நாட்டியக் கலைப்பணியும்**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**உலாப்பிரபந்தங்களில் நாட்டியசாஸ்திரம் கூறும் அஷ்டவித நாயகிகளின் வகிபங்கு**
கலாநிதி துஷ்யந்தி யூலியன் ஜெயப்பிரகாஷ்

**நாட்டுப்புற வழக்காறுகள் நோக்கில் கானகன் நாவல்**
ர.விண்ணிலவு1, முனைவர் அ. மரிய செபஸ்தியான்2

**சங்கக் கால திணை பதிவுகளின் இடையர் இன மக்களின் சமூக வாழ்க்கையும் கீதாரி நாவலில் இடையர் வாழ்வியல்**
ஓர் ஒப்பாய்வு- சே.நிர்மலா1, முனைவர் அ.மரிய செபஸ்தியான்2

**வேள்பாரி புதினத்துள் அகநானூற்று காட்சிகள்**
ர.கிருஷ்ணவேணி


அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**சைகோன் - புதுச்சேரி புதினம் முன்னிறுத்தும் காலனிய ஆணாதிக்கமும், பின்காலனியப் பெண்ணியமும்**
கே.பாலகிருஷ்ணன்1, பி.பாவேந்தன்2

**கவிஞர் எழிலவனின் 'மரவாடியில் ஒரு போதிமரத்தில்' படைப்பாக்க உத்திகள்**
சி.ஆர்த்தி

**தேனி சீருடையான் புதினங்களில் வெளிப்படும் பெண்களின் நிலை**
பி.தீபாவதி

**கீரனூர் ஜாகிர் ராஜா புதினங்களில் இஸ்லாமியர் பண்பாடு**
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

**உரிப்பொருள் உணர்த்தும் கவிஞர் சுகிர்தராணி கவிதைகள்**
ந.ஸ்டாலின்

**தமிழ்த் திரை இசைப் பாடல்கள்**
கார்த்திக் க

**நிர்வாணமுக்தி சிறுகதை - பெண்மைய விமர்சனம்**
ஜென்சி வை கி

**இன்றைய நாளிதழ்களில் தலையங்கங்கள்**
சே. வனிதா

**Historical And Archaeological Impact Of Palayarai**
Dr.S.Neelavathy

**Chola's Temples As A Social Organization**
A Study - S. Mala

**A Statue Of Prakara At The Kumbakonam Nageswara Temple**
M. Amirthavalli



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி


தமிழ்

# மணிமேகலையில் மனிதநேயம்

# *Humanity in Manimekalai*

***Author; P. Jothi**, Ref.No: BDU2110632779439, Ph.D. Research Scholar of Tamil,* ORCiD: https://orcid.org/0009-0005-6903-1563

***Research Guide : Dr. K. Bhuvaneswari,** Assistant Professor of Tamil, National College, Affiliated to Bharathidashan University, Tiruchirappalli, Tamil Nadu, India. ORCiD: https://orcid.org/0000-0002-3565-6101*

***Abstract:***

*Man lives with a narrow-mindedness and without any human qualities , thinking that he alone will live for thousands of years . In order to show that this intention is wrong, this article " **Humanity in Manimekalai** " has examined what the Manimekalai Kappiyam says about human qualities . The heroine of the Kappiyam, Manimegala , has shown humane deeds such as relieving hunger from the hungry , alleviating the great hunger of Kayasandika, and transforming the prison garden into a garden of virtue. Kayasandika has expressed the virtue of wanting the hungry poor to also experience the pleasure she has received. Sudamathi has protected and helped her friend Manimegala by telling her about her suffering so that she does not suffer any pain . Aputhira was raised by a cow, and the grown-up Aputhira saved the life of a cow tied for sacrifice. She begged for alms to relieve the hunger of the villagers and was patient in accepting scolding. She cured hunger with Amudasurabi. She has shown humane deeds such as not eating junk food , not killing prostitutes, not killing other people , and protecting those who sought her shelter. This article is researched and cited to promote awareness among the community.*

***Key words**: Humanity, Cow, Prison, Social Reformer, Lord of Buddha,*

**கட்டுரையாளர் :** பெ. **ஜோதி,** பதிவு எண்: *BDU2110632779439,*

முனைவர் பட்ட ஆய்வாளர், **நெறியாளர் :முனைவர் க.புவனேஸ்வரி,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி, பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது, திருச்சிராப்பள்ளி, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம் :**

இவ்வுலகமானது நிலையில்லாதது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இருப்பினும் தான் மட்டும் பல்லாயிரம் ஆண்டுகள் வாழப்போவதாக எண்ணிக்கொண்டு குறுகிய மனப்பான்மையோடு, மனிதநேயப் பண்புகள் ஏதுமின்றி மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். இந்நோக்கம் தவறானது என்பதை உணர்த்தும் வகையில் **"மணிமேகலையில் மனிதநேயம்"** என்னும் இக்கட்டுரையில் மனிதநேயப் பண்புகள் பற்றி மணிமேகலை காப்பியம் கூறுவனவற்றை ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. காப்பியத் தலைவியான மணிமேகலை பசித்தோர்க்கு பசிப்பிணி நீக்குதல், காயசண்டிகையின் பெரும்பசி போக்குதல், சிறைக்கோட்டத்தை அறக்கோட்டமாக மாற்றுதல் ஆகிய மனிதநேய மிக்க செயல்களை உணர்த்தியுள்ளத்தையும், காயசண்டிகை தான் பெற்ற இன்பத்தை பசியோடு இருக்கும் வறியவர்களும் அடைதல் வேண்டும் என்ற நற்பண்பை கூறியுள்ளதும், சுதமதி தன் தோழி மணிமேகலைக்குத் துன்பம் ஏதும் நேராத வகையில் தான் அடைந்த துன்பத்தை கூறி அவளைக் காத்து, உதவி புரிந்ததும், ஆபுத்திரன் பசுவால் வளர்க்கப்பட்டதும், வளர்ந்த ஆபுத்திரன் வேள்விக்காகக் கட்டப்பட்டிருந்த பசுவின் உயிரைக் காத்ததும், ஊர் மக்களின் பசித்துயரை நீக்கப் பிச்சையேற்றும், பழிச்சொல் ஏற்றும், பொறுமையுடன் இருந்தும், அமுதசுரபியைக் கொண்டு பசிப்பிணி போக்கியதும், சாதுவன் நாகர் இனத்தலைவனுக்குக் கள்ளுண்ணாமை, பரத்தையொழிப்பு, பிற உயிர் கொல்லாமை, தன்னை நாடியவர்களை அடைக்கலம் காக்குமாறு உணர்த்தியதுமாகிய செயல்களை எடுத்துரைத்து மனிதநேயமிக்க நற்பண்புகளை இன்றைய சமூகத்தினரிடையே வளர்க்க வேண்டி இக்கட்டுரையானது ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** மனிதநேயம், பசு, சிறைக்கோட்டம், சமூகசீர்த்திருத்தவாதி, புத்த தேவன்

**முன்னுரை:**

இவ்வுலகில் வாழும் மனிதனுக்கு அடிப்படைத் தேவையாக உணவு, உடை, உறைவிடம் ஆகியவை அமைகின்றன. இன்றியமையாத இத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள மனிதர்களில் சிலர் நேர்மையுடனும், சிலர் குறுக்கு வழியையும் தேடுகின்றனர். ஆதலால், மனிதன் எப்பொழுதும் பிறரைச் சார்ந்து வாழ்தல் என்பது உறுதியானதாகும். இவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்து வாழ நேரிடும்போது பிறரிடம் அன்பு செலுத்துதல், பிற உயிர்களைக் கொல்லாமை, துன்புறுத்தாமை, வறியோரை வாழ்வித்தல், இன்பமுடன் ஈகை, பசித்தோர்க்கு உணவளித்தல் இது போன்ற மனிதநேயமிக்க செயல்களைக் கடைப்பிடித்தல் அவசியமானதாகும். அவசரமான இவ்வுலகில் மனிதன் இவற்றையெல்லாம் படிப்படியாக மறந்து விடுவதால் மனிதநேயம் என்பது முற்றிலும் மறைந்து விடும் என்பதில்

வியப்பேதுமில்லை. காலப்போக்கில் இந்நிலையானது நீடிக்காமல் இருக்க தமிழ் இலக்கியங்கள் கூறும் மனிதநேயப் பண்புகளை படித்துணர்ந்து அதன்படி வாழ்தல் வேண்டும். ஆகவே, தமிழ் இலக்கியங்களில் சிறப்புப்பெற்ற இரட்டைக்காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை காப்பியம் கூறும் மனிதநேயப் பண்புகள் பற்றி '**மணிமேகலையில் மனிதநேயம்**' என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரையின் வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப் பெறுகின்றது.

**மனிதநேயம்:**

மனிதநேயம் என்பது பிற உயிர்களிடத்தில் அன்பும், அரவணைப்பும் கொண்டு தரும வழியில் வாழ்வதேயாகும். **"மானுட நேயம் என்பது மனித சமூகத்தின் மீது மட்டும் அன்பு காட்டுவது அல்ல. அனைத்து உயிர்களிடத்தும் அன்பு பாராட்டி, இரக்கம் கொண்டு வாழ்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் சமரச சன்மார்க்க வாதிகள்"** என்கிறார் வள்ளலார். (வள்ளலார் பாடல்களில் மானுட நேயம் ப. 208 தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்.) சன்-பொது ; மார்க்கம் — வழி. மனிதன் கொஞ்சம் கொஞ்சமாக மனிதநேயத்தை மறந்து வருகிறான் என்ற நிலையை **"பொய்கள் கூடி நியாயம் பேசும் தேசமாக சுயநலத்தில் சுருங்கி போய்விட்டது தமிழினம்"** தமிழருவி மணியன் குறிப்பிடுகிறார். ஆகவே, மனிதனிடத்தில் காலங்காலமாக இணைந்திருக்க வேண்டிய மனிதநேயப் பண்பை வருங்கால சந்ததியினருக்கு கற்றுக்கொடுக்கவேண்டும்.

**சுதமதியின் மனிதநேயம்:**

முன்பொரு சமயம் சண்பகாபுரியைச் சேர்ந்த கௌசிகன் என்னும் அந்தணனின் மகள் சுதமதி தனியே மலர் கொய்திருந்தபோது மாருதவேகன் என்னும் வித்தியாதரனால் வசப்படுத்தப்பட்டு பிழை மணம் எய்தி காவிரிப்பூம்பட்டினம் வந்தடைந்தாள். ஒரு சமயம் மணிமேகலை புத்த தேவனுக்குச் சூட்ட புதுமலர் பறிக்க எண்ணித் தனியே செல்ல இருந்த சமயத்தில் தனக்கு நேர்ந்த இத்துன்பநிலையை எடுத்துரைத்து தானும் உடன் செல்வதாக கூறினாள் என்பதனை,

**மணிமே கலையோடு, மாமலர் கொய்ய**

**அணிஇழை நல்லாய்! யானும் போவாள் என்று** மணிமேகலை. 3: 82 — 83

இவ்வடிகள் கூறுவதிலிருந்து சுதமதி தான் அடைந்த துன்பத்தை எவரொருவரும் அனுபவித்தல் கூடாது என்ற நல்ல சிந்தனையை உணர்த்தும் விதத்தில் கூறியுள்ளாள் என்பது அறியப்படுகிறது. ஆகவே, பெண்கள் தனியே செல்வது பாதுகாப்பின்மை என்ற நிலையில் சுதமதி மணிமேகலை தனியே செல்வதைத் தடுத்து தானும் உடன் செல்வதாக கூறினாள். இதிலிருந்து சுதமதி தன்

தோழி மணிமேகலையின் நலன் கருதி மனித நேயத்துடன் செயல்பட்டாள் என்பது புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. இங்கு சுதமதி தன் தோழியிடம் மனித நேயத்துடன் செயல்பட்டது போல பறவையிடமும், பிற உயிர்களிடமும் இரக்கம் கொள்ளுதல் வேண்டும் என்பதை நற்றிணையில்,

**வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇப்**

**பழனப் பல்புள் இரியக் கழனி.** நற்றிணை : 350

இப்பாடல் வரிகளில் உணரப்படுகிறது. நன்செய் நிலத்தில் விளையும் வெண்ணெல் என்னும் வெள்ளை நிற அரிசியானது நன்கு விளைந்து அறுவடைப் பருவம் எய்தியதும், உழவர்கள் அந்நெல்லை அறுவடை செய்யும் முன் தண்ணும்மை என்னும் கருவியை முழக்குவர். ஏனெனில், அறுவடைக் காலத்தில் வயல்களில் கூடுகட்டியிருக்கும் பறவைக் கூட்டங்களுக்கு ஏதேனும் துன்பம் நேரக் கூடாது என்பதை உணர்ந்து தண்ணும்மை முழக்கி, முழக்கத்தை கேட்கும் அப்பறவைகளைப் பாதுகாப்பாக இடம் பெயர செய்வர். இவ்வாறு நற்றிணை கூறுவதிலிருந்து மனிதநேயம் உணர்த்தப்பட்டுள்ளது. சுதமதி தன் தோழி மலர் பறிக்கத் தனியே சென்றால் நேரவிருக்கும் துன்பத்தைத் தடுக்க தனக்கு நேர்ந்த துன்பத்தை எடுத்துரைத்து மணிமேகலையுடன் சென்றாள். பறவைகளுக்கு நேரவிருக்கும் துன்பத்தை உணர்ந்து தண்ணும்மை முழக்கினர். இதிலிருந்து மனிதநேயம் அனைத்து உயிரிகளிடத்தும் காட்டப்படுவது ஆகும் என்றும் துன்பம் வரும் முன் காப்பதே சிறந்தது என்றும் உணர்ந்து கொள்ளப்படுகிறது. ஆகவே, பிற உயிர்கள் மீது காட்டும் அக்கறையே சமூக அக்கறையாகின்றது. இதனை, மணிமேகலை கூறும் சுதமதியின் பண்பும், நற்றிணை கூறும் உழவர்களின் செயலும் வாழ்க்கைக்கு சிறந்த வழிகாட்டியாக அமைந்த இக்கருத்துக்களை உறுதிப்படுத்தும் விதத்தில் **“சமூக அக்கறையுடன் இயற்றிய இலக்கியங்கள் காலம் கடந்தும் வாழ்க்கைக்கு வழிகாட்டியாகத் திகழும்”** (பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி. ப. 18) என்னும் நூல் சான்று பகர்கின்றது. மேலும், தோழி என்னும் உறவின் வலிமையை, **“தலைவியின் உரிமையையும், செயலையும் தன் உரிமையாக்கிக் கொள்ளும் உறவுடையவள் தோழி”** என்பதை (அகத்தில் அறம். ப-112. களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்) குறிப்பிடுகிறது.

**பசுவின் இரக்கம்:**

காசி நகரில் அபஞ்சிகன் என்ற அந்தணனின்மனைவி சாலி என்பவள் கற்புநெறி தவறி கருவுற்றாள். அவள் செய்த அப்பாவவினையிலிருந்து நீங்க எண்ணி தென் குமரிக் கடலுக்கு நீராடச் சென்றாள். செல்லும் வழியிலே நள்ளிரவு பொழுதில் சூல் முதிர்ந்து ஓர் ஆண்குழந்தையை ஈன்றெடுத்தாள். அக்குழந்தையின் மீது சிறிதும் இரக்கம் காட்டாமல் ஒரு

தோட்டத்திலே விட்டுச் சென்றுவிட்டாள். அத்தோட்டத்திலிருந்த பசு ஒன்று பசியால் அழுத அப்பச்சிளம் குழந்தையை தன் நாவினால் தடவி கொடுத்து இனிய பாலைச் சுரந்து பசியாற்றியதோடு ஏழு நாட்கள் வரை அக்குழந்தையைப் பாதுகாத்து வளர்த்ததனை,

**வாய்இல் தூவாக் குழவித்துயர் கேட்டு, ஓர்**

**ஆவந்து அணைத்து, ஆங்கு, அதன் துயர்தீர,**

**நாவால் நக்கி, தன் பால் ஊட்டி,**

**போகாது எழு — நாள் புறங்காத்து ஓம்ப** மணிமேகலை. 13: 11 - 14

இப்பாடல் வரிகளில் அறியப்படுகிறது. சாலி தான் ஈன்றெடுத்த குழந்தை என்று கூட எண்ணாமல் தோட்டத்திலே விட்டுச் சென்றதிலிருந்து, அன்பு, இரக்கம் போன்ற மனிதநேயப் பண்பு ஏதுமின்றி அறிவற்றவளாகச் செயல்பட்டாள் என்பது கருதப்படுகிறது. மேலும், அறிவுடைமை என்பது வள்ளலார், இவ்வுலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் ஒன்றையொன்று சார்ந்து வாழ்கின்றன. இவ்வாறு உயிரினங்கள் சார்ந்து வாழும் நிலையில், அவ்வுயிர்களுக்கு ஏதேனும் துன்பம் நேரும்போது அவ்வுயிர் மீது இரக்கம் கொண்டு காப்பதே சிறந்த அறிவுடைமையாகும். அவ்வாறு இரக்கம் கொள்ளாமல் மனிதநேயப் பண்பு ஏதுமின்றி செயல்படும்போது அச்செயலானது அறியாமையை குறிப்பதாகும். அறிவின் பயன் அவை அல்ல என்பதை வள்ளலார் வலியுறுத்தி அறிவு புகட்டியுள்ளார் என்பது அறிந்து கொள்ளப்பபட்டுள்ளது. இதனை,

**அருள் அறிவு ஒன்றே அறிவு மற்றெல்லாம்**

**மருள் அறிவு என்றே வகுத்த மெய் சிவமே** வள்ளலார் வாய்மொழி. ப.46

இவ்வரிகளில் அறியலாம். ஆறறிவு படைத்த மனித இனமான சாலியிடம் இல்லாத அன்பு, இரக்கம் போன்ற மனித நேயப்பண்பானது ஐந்தறிவு படைத்த பசுவிடம் காணப்பட்டுள்ளது. இன்றைய சமூகத்திலும் சாலி போன்று சிலர் கற்புநெறி தவறிப் பெற்றெடுத்த குழந்தைகளை அரசுத் தொட்டில்களிலும், குப்பைத் தொட்டிகளிலும் இட்டுச் செல்கின்றனர். இந்நிலை சமூகத்தில் ஒழிய வேண்டுமானால் மனக்கட்டுப்பாடுடன் வாழ்தலே சிறந்த வழியாகும் என்பது இங்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. சாலி விட்டுச் சென்ற குழந்தைக்கு பாலூட்டி, அக்குழந்தையை ஏற்று வளர்க்க எவரேனும் வரும்வரை ஏழு நாட்களும் பாதுகாத்து வளர்த்த பசுவின் பண்பானது மணிமேகலை காப்பியத்தில் சிறப்புக்குரிய ஒன்றாக கருதப்பட்டுள்ளது. (பசுவால் காக்கப்பட்ட இக்குழந்தையே இளம்பூதியால் வளர்க்கப்பட்டு ஆபுத்திரன் என்று மணிமேகலை காப்பியத்தில் ஒரு பாத்திரமாக இடம் பெற்றுள்ளான்.) ஐந்தறிவு படைத்த பசுவினது இரக்கக்குணத்தையும்,

அன்பையும் அறியும்போது மனிதன் மனிதநேயத்தில் மேலோங்கி வாழ்தல் வேண்டும் என்று கற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, **“மனிதநேயம் தழைக்கத் தடையாக இருப்பவை தகர்த்தெரியப்பட வேண்டும். மனிதநேயம் திணைப்பாகுபாடின்றி பேணப்படல் வேண்டும்”.** (வைரமுத்து கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள். ப-77. ஆய்த எழுத்து. தமிழியல் ஆய்வு இதழ்.) மேலும்,

ஒரு பெண் தான் பெற்ற குழந்தைக்கு பாலூட்டி, பசியாற்றி, பேணிக்காப்பது போல ஐந்தறிவு படைத்த பசுவானது ஆபுத்திரனை ஏழு நாட்கள் வரை வளர்த்து மனிதப் பண்புடையதாகச் செயல்பட்டது. ஆகவே, ஒரு விலங்கு மனிதனுக்கு உதவிய நிலையினை உணர்ந்து விலங்குகளை மதித்தல் வேண்டும் என்ற இக்கருத்தினை,

**விலங்குகளை மதியுங்கள்**

**அவைகள்**

**மாறுவேடமிட்டுக் கொண்ட**

**மனிதர்கள்** தமிழுக்கு நிறமுண்டு. ப. 45

இக்கவிதையில் கவிபேரரசு வைரமுத்து வலிமையாக உணர்த்தியுள்ளார்.

**ஆபுத்திரன் வெளிப்படுத்தும் மனிதநேயம்:**

மணிமேகலை காப்பியத்தில் இடம்பெறும் ஆபுத்திரன், ஊன் உண்ணுதற்காக வேள்வி நடத்தும் ஊரிலுள்ள அந்தணன் வீட்டில் வேள்விச் சாலையில் கட்டப்பட்டிருந்த பசுவின் உயிரைக் காப்பாற்ற அப்பசுவை நள்ளிரவில் கைப்பற்றி ஊரை விட்டு நீங்கிச் சென்றான். செல்லும் வழியில் அவ்வூர் அந்தணர்களால் தாக்கப்பட்டும் தன் துன்பத்தைப் பொருட்படுத்தாது பசுவைக் காப்பாற்றினான் என்பதை,

**அஞ்சி நின்று அளக்கும் ஆத்துயர் கண்டு**

**நெஞ்சுநடுக் குற்று, நெடுங்கணீர் உகுத்து,**

**“கள்ள வினையின், கடுந்துயர் பாழ்பட,**

**நள் இருள் கொண்டு நடக்குவன்”** மணிமேகலை. 13: 33-36

இப்பாடல் அடிகள் கூறுகின்றன. இவற்றிலிருந்து, ஊர் அந்தணர்களால் ஏற்பட்ட துன்பத்தையும் பொருட்படுத்தாது, தன் இரத்தத்தை பாலாக்கி மக்களின் பசியாற்றும் பசுவின் மீது இரக்கம்

கொண்டு, மன வலிமையுடனும், மனித நேயத்துடனும் பசுவின் உயிரை ஆபுத்திரன் காப்பாற்றினான் என்பதை உணர்ந்து கொள்ளமுடிந்தது. மேலும்,

ஜம்மு காஷ்மீரில் சுற்றுலா தலமான பஹல்காம் என்ற இடத்தில் 22.04.2025 அன்று பாகிஸ்தானின் பயங்கரவாதிகளால் அங்கிருந்த சுற்றுலா பயணிகள் தாக்கப்பட்டனர். அப்போது ஜம்மு காஷ்மீரை சேர்ந்த ஆதில்ஷா என்ற குதிரை சவாரி தொழிலாளி தன்னுடைய சுற்றுலா பயணிகளின் உயிரை காப்பாற்றுவதற்காக பயங்கரவாதிகளின் கையிலிருந்த துப்பாக்கியையும் பொருட்படுத்தாது தன் உயிரைப் பணயம் வைத்து அவர்கள் கையிலிருந்த துப்பாக்கியைப் பறிக்க முயன்றார். ஆனால், அவருடைய முயற்சி பயனின்றி பாகிஸ்தானின் பயங்கர வாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதிலிருந்து, தன் கண் முன்னே உயிர்கள் கொல்லப்போவதைத் தடுக்க நினைத்த ஆதில்ஷாவின் மனித நேயமிக்க கடமை உணர்வு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. காப்பிய காலத்தில் ஆபுத்திரன் வேள்விச்சாலையில் கட்டப்பட்டிருந்த பசுவின் உயிரைக் காப்பாற்ற தன்னுயிரையும் பொருட்படுத்தாது அந்நள்ளிரவில் பல துன்பங்களுக்கு இடையில் பசுவின் உயிரைக் காத்தான். இன்றைய சமூகத்தில் தனது சுற்றுலாப் பயணிகளின் உயிர்களைக் காக்க தன் இன்னுயிரையும் பொருட்படுத்தாது பயங்கரவாதிகளுடன் போராடிய ஆதில்ஷாவின் மனித நேயம் மிகுந்த செயல் அறிந்து கொள்ளப்பட்டது. ஆகவே, மனிதநேயம் என்பது காலங்காலமாக மக்களிடையே இருந்து வரும் பண்பு என்பதும் இப்பண்பானது அழியாமல் பாதுகாக்க வேண்டும் என்பதும் இங்கு உணர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. ஆகவே, உயிர் என்பது விலங்கு என்றாலும் மனிதன் என்றாலும் ஒரே உணர்வுதான் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, பிற உயிர்களை காப்பது நம் கடமையாகும் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். எனினும், இன்றைய சமூகத்திலும் மனிதநேயம் என்பது அறவே நீங்காமல் ஆங்காங்கே வளர்ந்து வருகின்றது என்பது மிகவும் பெருமைக்குரியதாக கருதப்படுகின்றது. மேலும், மனிதநேயம் என்பது மனிதரிடத்தில் மட்டும் காட்டுவது அல்ல. அனைத்து உயிரினங்களிடத்திலும் இரக்கம் காட்டுவதே மனிதநேயமாகும்.

இதனை,

**அருளுடையார் எல்லாம் சமரசன் மார்க்கம்**

**அடைந்தவரே........** வள்ளலார் வாய்மொழி. ப.27

பசிப்பிணி போக்கிய அருளாளன் என்று போற்றப்படும் வள்ளலார் கூறியுள்ளார்.

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**

**தம்முயிர்போல் எண்ணி...** திருவருட்பா- ஆறாம் திருமுறை. பா. எண் . 1616

இப்பாடல் வரிகளில் அறிந்ததனை, ஆபுத்திரன் எல்லா உயிர்களையும் தம்முயிராக கருதி அவர்களின் பசிப்பிணி போக்கிய அருளாளனாகக் காப்பிய காலத்தில் செயல்பட்டான் என்பதிலிருந்து மனிதநேயப் பண்பாளனாக காணமுடிகிறது. மேலும், ஆபுத்திரன் பசுவின் உயிரைக் காப்பாற்றியதற்காக மனிதநேயம் இல்லாத ஊர் மக்களால் ஆ திருடிய கள்வன் எனப் பழி சுமத்தப்பட்டு ஊரை விட்டு விரட்டப்பட்டான். ஆபுத்திரனின் வளர்ப்புத் தந்தை இளம்பூதியும் அவனை வீட்டை விட்டு விரட்டினார். பின்பு உணவுக்காக வீடுதோறும் இரந்து உணவைப் பெற்று, அவ்வுணவை குருடர், செவிடர், முடவர், நோய்வாய்ப்பட்டோர், ஆதரவற்றோர், ஆகியோரை அழைத்து அவர்களுக்கு உணவு வழங்கி எஞ்சிய உணவை மட்டும் தானுண்டு வாழ்ந்தனை,

**ஐயக் கடிஞ்சை கையின் ஏந்தி,**

**மைஅறு சிறப்பின் மனைதோறும் மறுகி,**

**“காணார், கேளார், கால்முடப்பட்டோர்,**

**பேணுநர் இல்லோர், பிணிநடுக் குற்றோர்,**

**யாவரும் வருக” என்று இசைத்து, உடன்ஊட்டி,**

**உண்டுஒழி மிச்சில் உண்டு, ஓடுதலை மடுத்து**

**கண்படை கொள்ளும் காவலன் — தான் — என்** மணிமேகலை. 13 : 100 — 115

இப்பாடல் அடிகள் கூறுகின்றன. ஆபுத்திரன் ஊராரால் விரட்டப்பட்டுத் துன்ப நிலையை அடைந்த போதும் தான் பிச்சையேற்ற உணவைப் பகிர்ந்தளித்து எஞ்சியதை மட்டும் உண்டதிலிருந்து சுயநலமற்றுப் பிறர் பசிப்போக்கிய பண்பாளன் என்பதும் அறிந்து கொள்ளப்பட்டது. தன் பசியை மட்டும் போக்கி கொள்ளும் எண்ணம் இல்லாமல், இயலாதவர்களின் பசியையும் போக்க வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனை கொண்டு பிச்சையேற்று பகிர்ந்தளித்ததிலிருந்து ஆபுத்திரனின் இரக்கம் நிறைந்த மனிதநேயப் பண்பு காணமுடிந்தது.

உணவுக்காகப் பிச்சையேற்று அலையும்போது பிறர் சை என்று வெறுத்துக் கூறினாலும், கிடைத்த உணவைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து உண்ண வேண்டும் என்று ஔவையார் கூறியதனை,

**சைஎனத் திரிந்தால் ஐயமிட்டு உண்.** கொன்றைவேந்தன் — 34

இவ்வரியில் அறியமுடிகிறது. ஆபுத்திரன் பிச்சையேற்றபோது ஊர்மக்கள் ஆபுத்திரன் கையில் வைத்திருந்த பிச்சைப் பாத்திரத்தில் கற்களை இட்டும், பழி கூறியும் ஏளனம் செய்தனர். ஔவையின் கூற்றை மதிக்கும் வகையில் தனக்குக் கிடைத்த உணவைக் காணார், கேளார், முடவர், வறியோர், பிணியுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்குப் பகிர்ந்து அளித்த ஆபுத்திரனின் செயல்பாடானது அமைந்துள்ளது.

**சமூக சீர்த்திருத்தவாதியான சாதுவன்:**

காவிரிப்பூம்பட்டினத்தில் வாழும் சாதுவன் என்னும் வணிகன் பரத்தை ஒருத்தியிடம் சென்று பொருள் அனைத்தையும் இழந்த நிலையில், மீண்டும் பொருளீட்டக் கடல் கடந்து வாணிபம் மேற்கொண்டான். நடுக்கடலில் பெருங்காற்று வீச, மரக்கலம் கவிழ்ந்தது. மரத்துண்டு ஒன்றைப் பற்றிக் கொண்ட சாதுவன் நாகர்கள் வாழும் மலையடிவாரத்தில் கரை ஒதுங்கினான். நாகர் இனத்தலைவனைச் சந்தித்த சாதுவன், உயிர்களைக் கொன்று உணவு உண்பதும், கடலில் உயிர்த்தப்பிப் பிழைத்து வரும் மனிதர்களைக் கொன்று தின்பதும், மது, மாது என களியாட்டம் கொள்வதும் அறம் ஆகாது என அறிவுரைகள் கூறி, தீய குணம் கொண்ட நாகர் இனத்தலைவனை நல்ல மனம் படைத்தவனாக மாற்றினான். இதனை,

**உடைகல மாக்கள் உயிருய்ந்து ஈங்குஉறின்,**

**அடுதொழில் ஒளிந்து, அவர் ஆருயிர் ஓம்பி,**

**மூத்துவிளி மாஒழித்து, எவ்உயிர் மாட்டும்**

**தீத்திறம்ஒழிக! என** மணிமேகலை. 16 : 114 — 117

இப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றது. காவிரிப்பூம்பட்டினத்தில் பரத்தையிடம் சென்று தன் தவறை உணர்ந்த சாதுவன், தவறு செய்கின்ற நாகர் இனத்தலைவனை நற்பண்பு உடையவனாக மாற்றியதிலிருந்து சமூக சீர்த்திருத்தவாதியாகவும், மனிதநேயமிக்க பண்பாளனாகவும் இனங் காணப்பட்டுள்ளான். இதனை, வள்ளலார் கள்ளுண்பவர்களைக் கண்டு தான் அச்சம் கொள்வதாகக் கூறுகிறார்.

**களியரைக் கண்டு பயந்த என் பயந்தான்**

**கடலினும் பெரிது கண்டாய்** வள்ளலார் வாய்மொழி. ப. 167

இவ்வாறு வள்ளலார் இப்பாடல் வரிகளில் கூறுவதிலிருந்து, ஒரு தனி மனிதனின் அழிவு மட்டும் இல்லாது, அவனைச் சார்ந்த குடும்பமும் பாழ்படும் என்றும் இவ்வாறு பல குடும்பங்கள்

சிதைவடையும்போது சமூகம் பாழாகும் என்பதை மனதில் கொண்டு கள்ளுண்பவரை கண்டு பயந்தார் என்று உணரமுடிகிறது. சாதுவனும் நாகர் இனத்தலைவனுக்கு கள்ளுண்ணாமை, அடைக்கலம் புகுந்தோரை காத்தல், பரத்தையொழிப்பு, பிற உயிர்களை துன்புறுத்தாமை ஆகிய நல்மொழிகளைக் கூறியதிலிருந்து மனிதநேயமிக்க சமூக சீர்த்திருத்தவாதியாகக் காணப்பட்டுள்ளான். மேலும்,

ஒரு நாடானது அனைத்து வளங்களும் நிறைந்ததாக இருந்தாலும், அந்நாட்டில் உள்ள ஆடவர்கள் கடைப்பிடித்து வாழும் ஒழுக்கங்களைப் பொறுத்தே அந்தநாடு நல்ல நாடாகிறது என்பதனை ஒளவையார் புறநானூற்றில் கூறியதனை,

**நாடாக ஒன்றோ; காடாக ஒன்றோ;**

**அவலாக ஒன்றோ; மிசையாக ஒன்றோ;**

**எவ்வழி நல்லவர் ஆடவர்**

**அவ்வழி நல்லை வாழிய நிலனே** புறநானூறு. பா. 187

இப்பாடல் அடிகளில் அறியப்படுகிறது. மலைவளம் உடைய நாட்டைச் சேர்ந்த நாகர் இனத்தலைவனுக்கு, மது, மாது, புலால், உயிர் கொலை புரிதல், இவையாவும் ஒழுக்கமாகாது என அறிவுரை வழங்கி நாகர் இனத்தலைவனை நற்பண்புடையவனாக மாற்றியதிலிருந்து சாதுவனின் சமூகநலம் கொண்ட மனிதநேயமானது மணிமேகலை காப்பியத்தில் அறியப்படுகிறது. ஆகவே, ஒருநாட்டின் மக்களை பொறுத்தே அந்நாடு நன்னாடாகும் என்ற ஒளவையாரின் கூற்றுக்கு இணங்க சாதுவனின் செயல்பாடும் ஒப்புநோக்க தக்கதாக அமைந்துள்ளது. இக்கருத்தினை, **“மனிதனின் செயல்கள் தான் சமூக மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் காரணமாக அமைகின்றன”** என்று மாக்ஸ்வெபர் கூற்று (அபிவிருத்தி பற்றிய சமூகவியல் கோட்பாடுகள். ப.3) குறிப்பிட்டுள்ளது.

**காயசண்டிகையிடம் தோன்றும் மனிதம்:**

அமுதசுரபியின் உதவியோடும், மணிமேகலையின் அருளோடும் தீராத பசிநோயிலிருந்து நீங்கிய காயசண்டிகையானவள், மணிமேகலையிடம் தவத்தோர் வாழும் சக்கரவாளக் கோட்டத்தினுள் எப்போதும் திறந்திருக்கும் பிளந்தவாய் போன்று அமைந்துள்ள வாயிலையுடைய ஊர் அம்பலத்தில் வறுமையுற்றோர், பிணியுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோர் சோறு இடுபவர் எவரேனும் வருவார்களா என எதிர்பார்த்து பசியோடு காத்திருப்பார். ஆதலால், அங்கு சென்று உணவு வழங்கு என கூறியதனை,

**ஊர்ஊர் ஆங்கன் உறுபசி உழன்தோர்**

**ஆரும் இன்மையின் அரும்பணி உற்றோர்**

**இடுவோர்த் தேர்ந்து, அங்கு இருப்போர் பலரால்;**

**வடுவாழ் கூந்தல்! அதன்பால் போக என்று** மணிமேகலை. *17: 79 — 82*

இப்பாடல் வரிகளில் காணமுடிகிறது. தீராத பசி நோயிலிருந்து நீங்கிய காயசண்டிகை தன் பசி தீர்ந்தது என பாராமல் தாக்கு வலிப்பது போல பிறருக்கு வலிக்கும் என்ற உணர்வுடன் பசியோடு இருப்பவர்களின் வேதனையை புரிந்து கொண்டு அவர்களும் அமுதசுரபியின் பயனை நுகர்ந்து பசியாற வேண்டும் என்ற இரக்க உணர்வுடன், தன்னலமின்றி மணிமேகலையை உலகவறவிக்கு சென்று உணவு வழங்க கூறியதிலிருந்து காயசண்டிகையின் சுயநலமற்ற மனிதநேயத்தை அறிந்து கொள்ளமுடிந்தது. இதனையே, இறைவனை உணர்ந்து தான் அடைந்த இன்பத்தை இவ்வுலகில் உள்ள அனைவரும் பெற வேண்டும் என்ற திருமூலரின் தன்னலமற்ற கருத்தினை,

**யான் பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்** திருமந்திரம். பாடல் எண். *85*

இவ்வடியில் அறிவது போல, தான் துன்புற்ற கொடிய பசி நோயிலிருந்து நீங்கி இன்பம் அடைந்தது போல, பசியோடு இருப்பவர்களும் அமுதசுரபியின் உதவியால் பசித்துயர் நீங்கி இன்பம் அடைதல் வேண்டும் என்ற காயசண்டிகையின் உயர் நோக்கு சிந்தனையானது திருமூலர் கூறும் சிந்தனையோடு ஒப்பு நோக்கத்தக்கதாகின்றது. மேலும்,

மணிமேகலை பிடியளவு சோற்றை அமுதசுரபியிலிருந்து எடுத்து யானைத்தீ என்னும் கொடிய நோயை சாபத்தினால் பெற்ற காயசண்டிகைக்கு அளித்தாள். மணிமேகலை அளித்த பிடிசோறானது காயசண்டிகையின் பெரும் பசியைப் போக்கியது. இக்கருத்தை,

**பிடிபிச்சை பின்னிறை ஐயங்கூழ் கூற்றோ**

**டெடுத்திரத்த வுப்பித் துணையோ தடுத்துக்**

**சிறுபய மென்னார் சிதவலிப் பீவார்**

**பெறுபயன்பின் சாலப் பெரிது.** சிறுபஞ்சமூலம். பாடல் எண். - *64*

இப்பாடல் வழி அறியப்படுகிறது. பிடியில் அடங்கும் பிச்சை சோறும், விரலிறையுளடங்கும் பிச்சை சோறும் சிறிதளவு தானே என்று அலட்சியப் படுத்தாமல் மன நிறைவுடன் அளிக்கும்போது அவற்றின் பயன் பெரிதாகும் என்று இவ்வரிகளில் கூறியதுபோல் மணிமேகலை அளித்த பிடியளவு சோற்றில் காயசண்டிகையின் பெரும்பசியும் அடங்கியது என்ற கருத்து

ஒப்புமை அறியப்பட்டுள்ளது. மேலும், காயசண்டிகை பெரும் பசி என்னும் துன்பத்தை அனுபவித்ததிலிருந்து நரக வாழ்க்கையை வாழ்ந்தால் என்று உணரப்படுகிறது. இத்துன்பத்தை உணர்த்துவிதமாக **"உணவில்லாமல் மக்கள் வாழ்வது நரகத்தைப் போன்று வேறு எதுவும் இல்லை. அதுவே சொர்ர்கமாகும்"** (வெ.இறையன்பு படைப்புகளில் காணலாகும் தனிமனித வாழ்வியல் சிந்தனைகள். ப-10) குறிப்பிடுகிறது.

**மணிமேகலையின் நல்லறம்:**

விருச்சிக முனிவரின் சாபத்தால் பன்னீராண்டு யானைத்தீ என்னும் கொடிய பசி நோயால் துன்புற்ற காயசண்டிகைக்கு, தெய்வம் அருளிய வற்றாது பொங்கும் அமுதசுரபியிலிருந்து ஒரு பிடி சோற்றை எடுத்து காயசண்டிகையின் கையில் கொடுத்து அவளுற்ற கொடிய பசியை போக்கினாள். இதனை,

**எடுத்த பாத்திரத்து ஏந்திய அமுதம்**

**பிடித்து அவள் கையில் பேணினள் பெய்தலும்**

**வயிறுகாய் பெரும்பசி நீங்கி** மணிமேகலை. 17 : 17 — 19

இப்பாடல் அடிகள் கூறுகின்றன. அமுத சுரபியின் உதவியால் காயசண்டிகையின் தீராத பசியைப் போக்கிய மணிமேகலையின் செயலானது நல்லறமாக கருதப்படுகிறது. நல்லெண்ணம் கொண்டு பிறர் துன்பத்தை தீர்த்து நன்மை அடைய காரணமாக இருத்தலும் மனிதநேயம் மிக்க செயல்களாகவே உணரப்படுகிறது. கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது என்ற பழமொழிக்கேற்ப அமுதசுரபியின் ஒரு பிடி சோறானது காயசண்டிகையின் பெரும் பசி நீக்கியது. காயசண்டிகையின் சொல் கேட்டு உலகவறவி என்னும் அம்பலத்திற்குச் சென்று பசியோடு இருப்பவர்களை அழைத்து உணவு அளித்தனை,

**அமுத சுரபியோடு ஆய் - இழை தோன்றி;**

**ஆபுத் திரன்கை அமுத சுரபி இது;**

**யாவரும் வருக, ஏற்போர் தாம்! என**

**ஊண்ஒலி அரவத்து ஒலிஎழுந் தன்றே**

**யாணர்ப் பேர்ஊர் அம்பல மருங்கு** மணிமேகலை. 17 : 94 — 98

இப்பாடல் அடிகள் உணர்த்துகின்றன. இங்கு மணிமேகலை பசியோடு இருக்கும் வறியோரைத் தேடிச்சென்று உணவு வழங்கியதிலிருந்து, வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு உணவு வழங்குவதை விட, பசியோடு இருக்கும் வறியோரைத் தேடிச்சென்று உணவு அளித்தலே மிகச் சிறந்த

மனிதநேயச் செயலாகும் என்பதை உணர்த்தியுள்ளது. காயசண்டிகையின் சொல் கேட்டு, அதன்படி உலகவறவி என்னும் அம்பலம் சென்று உணவு வழங்கியதிலிருந்து பிறர் சொல் மதித்தல் என்னும் நற்பண்பை கடைப்பிடித்து வாழ்ந்தாள் என்ற மனிதநேயப் பண்பை வெளிப்படுத்தியுள்ளது. காயசண்டிகை மட்டுமல்லாது, தாய் மாதவி, தோழி சுதமதி, அறவணவடிகள், ஆதிரை, தீவதிலகை, மணிமேகலை தெய்வம், கந்திற்பாவை ஆகிய அனைவரின் கூற்றையும் ஏற்று நடந்தாள் என்பதிலிருந்து பிறர் சொல்லை மதித்தல் என்னும் மனிதநேயப் பண்பை பெற்றிருந்தவளாக மணிமேகலை காப்பியத்தில் இடம் பெற்றுள்ளாள். மேலும்,

ஒருவன் தன்னிடம் உள்ள செல்வத்தை பாதுகாப்பான இடத்தில் சேமித்து வைத்தல் பிற்காலத்தில் பயனளிப்பது போலப் பிறர் பசியாற்றுவதும் பயனளிக்கும் என்ற கருத்தை உணர்த்தும் வகையில் குறளானது,

**அற்றார் அழிபசி தீர்த்தல் அதொருவன்**

**பெற்றான் பொருள் வைப்பு உழி.** திருக்குறள் : 226

இங்கு கூறப்பட்டுள்ளது. இக்குறள் உணர்த்தும் கருத்திற்கிணங்க அமுதசுரபியின் உதவியால் வறியோரின் பசியைப் போக்கும் அறச்செயலை மேற்கொண்டு இம்மைக்கும், மறுமைக்கும் பயனளிக்கக்கூடிய புண்ணிய காரியங்களை மணிமேகலை செய்து வந்தாள் என்பது அறிந்து கொள்ளப்படுகிறது.

**சிறைக்கோட்டம் — அறக்கோட்டம்:**

இளவரசன் உதயகுமரனின் நலம் கருதி, கடும்பசி நோயால் துன்புற்ற காயசண்டிகையின் உருவத்தை மந்திரத்தின் வலிமையால் பெற்றுக்கொண்டு கையில் அமுதசுரபி பாத்திரத்தை ஏந்தியவாறு அம்பலத்திலிருந்து புறப்பட்டு தவறு செய்தோரை தண்டிக்கும் சிறைச்சாலைக்குள் நுழைந்தாள். சிறைச்சாலையினுள் தண்டனையாலும், கொடும் பசியாலும் உடல் வாடியிருந்தவர்களின் கைகள் வருந்துமளவு எடுக்க எடுக்க குறையாத அமுதசுரபியை கொண்டு உணவு அள்ளிக் கொடுத்துப் பசியாற்றிய செயலை காவலாளர்களால் கேள்வியுற்ற மன்னன் கிள்ளிவளவன், மணிமேகலையை அழைத்து அவள் யார் என்பதை அறிந்து கொண்டான். மணிமேகலையின் இத்தகைய அறச்செயலை அறிந்த மன்னன் அவளை பாராட்டி நான் செய்ய வேண்டியது யாதென வினவினான்? "சிறைச் சாலையை அழித்து அருள் உள்ளம் உடைய தவத்தோர் வாழும் அறச்சாலையாக ஆக்குக!" என கூறியதும், மன்னனும் மணிமேகலையின் அறிவுரையைக் கேட்டு சிறையில் இருந்தவர்களை விடுவித்து அறவோர்கள் நிறைந்த இடமாக மாற்றினான் என்பதனை,

**அருஞ்சிறை விட்டு, ஆங்கு ஆய் — இழை உரைத்த**

**பெருந்தவர் — தம்மால் பெரும்பொருள் எய்த**

**கறையோர் இல்லாச் சிறையோர் கோட்டம்**

**அறவோர்க்கு ஆக்கினான், அரசு ஆள் வேந்து** மணிமேகலை. 19: 159 -162

இப்பாடல் அடிகள் கூறுகின்றது. மணிமேகலை குற்றம் செய்து சிறையில் இருந்தவர்களையும் குற்றம் செய்தவர்களாக எண்ணாமல் அவர்களையும் சக மனிதர்களாக உணர்ந்து அவர்களை சிறையிலிருந்து விடுவிக்குமாறு கூறியதிலிருந்து, தன்னலம் கருதித் தனக்கு வேண்டுமென எதனையும் கேளாமல், பிறர் நலம் கருதிச் செயல்பட்டாள் என்பதை அறிய முடிகிறது. ஆகவே, தன்னலமின்றிப் பொது நலம் கருதி சிறைச்சாலையை, அறக்கோட்டமாக மாற்றுவித்தாள். ஆகவே, மணிமேகலை உடலும், மனமும் ஒன்றிணைந்து அறம் மேற்கொண்டதால் மனிதநேயப் பண்புடையவளாக காணப்படுகிறாள். இச்சிந்தனைக்கு வலுசேர்க்கும் விதத்தில், **“உடலில் இருந்து வேறுபட்ட ஒன்றாக ஆன்மாவை நிரூபிக்க முடியாது. இவை உடலின் பண்பாக இருக்க முடியும்”** (தொல் தமிழர் வாழ்வியல் இறப்பும், மானுட எண்ணமும், ப. 38) குறிப்பிடுகிறது.

**முடிவுரை :**

நாம் வாழும் இவ்வுலகமானது திடீரென பெய்யும் மழை மிகுதியால் வெள்ளப்பெருக்கு, தண்ணீரின்றி வறட்சி நிலவுதல், நிலச்சரிவு, நிலநடுக்கம், கடற்கோள், வாகனங்களால் ஏற்படும் விபத்து இதுபோன்ற இயற்கை பேரழிவுகளால் அழியும் தன்மையுடையது. ஆகவே, மறுகணம் மறைமுகமாய் இருக்கும் நம்வாழ்வில், எல்லோரிடமும் அன்பு செலுத்துதல், பசித்தோர்க்கு உணவளித்தல், பெரியோரை மதித்தல், ஒருவருக்கொருவர் உதவுதல், செய்நன்றி மறவாமை, பிற உயிர்கொல்லாமை, இனவெறியாலும், மதவெறியாலும் நாடுகளுக்கிடையே ஒற்றுமையின்றி போர் செய்யாதிருத்தல் ஆகிய அறம் சார்ந்த நற்பண்புகளை வாழ்வில் கடைப்பிடித்து வாழவேண்டும் என்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நிறைவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஆகவே, மனிதன் மனிதனை மதித்துப் பிறர் உணர்வை உயிரெனக் கருதி, மனிதத்தைக் காத்து வாழ வேண்டும். எனினும், நல்ல எண்ணங்களும், நல்ல செயல்களுமே ஒரு மனிதனை வாழ்வில் உயர்த்தும். ஆதலால், நல்லதையே எண்ண வேண்டும். இதுவே மனிதனை மேன்மை அடையச் செய்து மானிட வாழ்வைச் சிறக்க செய்யும்.

**சான்றெண் விளக்கம்:**


*1. வள்ளலார் பாடல்களில் மானுட நேயம், ப. 208. தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ்.*

*2. எங்கே போகிறோம் நாம். ப.22*

*3. மணிமேகலை. 3: 82 — 83*

*4. நற்றிணை : 350*

*5. பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி. ப. 18*

*6. அகத்தில் அறம், ப. 112. களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்.*

*7. மணிமேகலை. 13: 11 - 14*

*8. வள்ளலார் வாய்மொழி. ப.46*

*9. வைரமுத்து கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள், ப.77. ஆய்த எழுத்து தமிழியல் ஆய்வு இதழ்.*

*10. தமிழுக்கு நிறமுண்டு. ப. 45*

*11. மணிமேகலை. 13: 33-36*

*12. வள்ளலார் வாய்மொழி. ப.27*

*13. திருவருட்பா- ஆறாம் திருமுறை. பா. எண் . 1616*

*14. மணிமேகலை. 13 : 100 — 115*

*15. கொன்றைவேந்தன் — 34*

*16. மணிமேகலை. 16 : 114 — 117*

*17. வள்ளலார் வாய்மொழி. ப. 167*

*18. புறநானூறு. பா. 187*

*19. அபிவிருத்தி பற்றிய சமூகவியல் கோட்பாடுகள், ப.3. நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் ஆய்விதழ்,*

*20. மணிமேகலை. 17: 79 — 82*

21. திருமந்திரம். பாடல் எண். 85

22. சிறுபஞ்சமூலம். பாடல் எண். — 64

23. வெ.இறையன்பு படைப்புகளில் காணலாகும் தனிமனித வாழ்வியல் சிந்தனைகள், ப-10. தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ்,

24. மணிமேகலை. 17 : 17 — 19

25. மணிமேகலை. 17 : 94 — 98

26. திருக்குறள் : 226

27. மணிமேகலை. 19: 159 -162

28. தொல் தமிழர் வாழ்வியல் இறப்பும், மானுட எண்ணமும், ப. 38. அரிமா நோக்கு ஆய்விதழ்.

**துணைநூற்பட்டியல் :**


1. இராதிகா, இரா. (தொல் தமிழர் வாழ்வில் இறப்பும் மானுட எண்ணமும்) அரிமா நோக்கு ஆய்விதழ், தொகுதி 16, இதழ்-4, ஜனவரி-2023.
2. இறையன்பு,வெ. (வெ.இறையன்பு படைப்புகளில் காணலாகும் தனிமனித வாழ்வியல் சிந்தனைகள்) தமிழ்மணம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ், தொகுதி-1, எண்-4, ஜனவரி-2025.
3. இராஜாராம், துரை. திருமூலர் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு. மார்ச்-2010.
4. எதிரொலி விசுவநாதன். ஔவை அமுதம் (2-ம் பாகம்) மாதா பதிப்பகம் சென்னை. முதற்பதிப்பு. 1987
5. கந்தசாமி,சோ.ந. நற்றிணை (தொகுதி-1) மணிவாசகர் பதிப்பகம். சென்னை. முதற்பதிப்பு — டிசம்பர்.2018.
6. கந்தையாசண்முகலிங்கம். (அபிவிருத்தி பற்றிய சமூகவியல் கோட்பாடுகள்) நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம் ஆய்விதழ், தொகுதி-14, இதழ்-5, ஆகஸ்ட்-2022.
7. சிதம்பரனார், சாமி. வள்ளலார் வாய்மொழி. தமிழ் நிலையம் பதிப்பகம், சென்னை, இரண்டாம் பதிப்பு -2018.
8. தண்டபாணி,துரை .மணிமேகலை. உமாபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு. டிசம்பர்.2001.

9. தமிழருவிமணியன். எங்கே போகிறோம் நாம். கற்பகம் புத்தகாலயம் சென்னை, முதற்பதிப்பு. 2018.
10. பாண்டியன், க. புறநானூற்றில் வாழ்வியல் கோட்பாடுகள். வனிதா பதிப்பகம். சென்னை. முதற்பதிப்பு. டிசம்பர்-2010.
11. பிரேம்குமார்,த. (வைரமுத்து கவிதைகளில் மனிதநேயச் சிந்தனைகள்) ஆய்த எழுத்து. தமிழியல் ஆய்வு இதழ். மலர்.1. இதழ்-4, ஜனவரி — 2014.
12. புலியூர்க்கேசிகன். திருக்குறள். குமரன் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு. டிசம்பர்-2022.
13. மாணிக்கம்,அ. திருஅருட்பா செய்யுள் பகுதி (ஆறு திருமுறைகள்) வர்த்தமானன் பதிப்பகம். சென்னை. முதற்பதிப்பு-2002
14. ரவி, கெ. பத்துப்பாட்டினில் ஆளுமை வளர்ச்சி, நிலா சூரியன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு-2017.
15. வைரமுத்து, இரா. தமிழுக்கு நிறமுண்டு. சூர்யா வெளியீடு, சென்னை. 24
16. கௌமாரீஸ்வரி, எஸ். சிறுபஞ்சமூலம் (மூலமும் உரையும்) சாரதா பதிப்பகம். சென்னை, முதற்பதிப்பு. ஆகஸ்ட்-2005.
17. ஜெய்சங்கர், இரா. (வள்ளலார் பாடல்களில் மானுட நேயம்) தமிழ் மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டுஆய்விதழ் தொகுதி 5. இதழ் வெளியீடு 2. ஜனவரி .2023
18. ஜெயபுனிதவள்ளி, வி. (அகத்தில் அறம்) களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்வு இதழ். தொகுதி-4, இதழ்—2, மே. 2025.

## *References:*

1. Radhika,R. (Thol Thamizhlar Vazlvil Irappum Maanuda Ennamum) Arimaa Nokku, Aaivithazl, Volume-16, No-4, January-2023.

2. Iraiyanpu, V. (V. Iraiyanbu Padaippukalil Kaanalakum Thanimanitha Vazlviyazl, Sinthanaikal) Thamizlmanam Sarvathesa Thamizl Aayivu Ithazl, Volume-1, No-4, January-2025.

3. Rajaram,Durai. Thirumuular Vazlvum Vaakkum, Narmatha Pathipakam, Chennai, First,Edision. March-2020.

4. Ethiroli Visuvanathan. Avwai Amutham (2 nd Volume), Maatha Pathipakam, Chennai. FirstEdision,- 1987.

5. Kanthasami,S.N. Natrinai (Volume -1) Manivaasakar Pathippakam, Chennai. First Edision. December — 2018.

6. *Kanthaiyasanmukalingam. (Abiviruthi Patriya Samuukaviyal Kotpadukal) New Centuriyin Ungal Noolakam Aayivithazl, Volume-14, No.5, Augaust-2022.*

7. *Chidamparanar, Sami. Vallalar Vaaimozhi. Tamil Nilaiyam Pathippakam, Chennai. Second Edision. 2018.*

8. *Dhandapaani, Durai. Manimegalai. Uma Pathippakam, Chennai. First Edision. December-2001.*

9. *Thamizharuvimaniyan. Yengea Pokirom Naam. Karpakam Buthakalayam. Chennai. First Edision. 2018.*

10. *Paandiyan, K. Puranaanutril Vaazlviyazl kotpodukal. Vanitha Pathippakam. Chennai.First Edision. December -2010.*

11. *Premkumar,T. (Vairamuthu Kavithaikalil Manithaneya Sinthanaigal) Aayitha Ezhuthu.Thamizhiyal Aayivy Ithazl. Volume -1, No.4,January — 2014.*

12. *Puliyurkesikan. Thirukkural. Kumaran Pathippakam, Chennai. First Edision. December-2022.*

13. *Maanikam,A.Thiru Arutpa Seiyul Pakuthi (Aaru Thirumuraikal), Varthamaanan Pathippakam. Chennai. First Edision.2002.*

14. *Ravi, K. Patthupaatinil Aalumai Valarchi, Nila Suriyan Pathippakam, Chennai.First Edision. 2017.*

15. *Vairamuthu, R. Thamizhukku Niramundu, Surya Veliyeedu, Chennai. First Edision. 1997.*

16. *Kowmarishwari, S. Sirupanchamuulam (Muulamum Uraiyum), Saratha Pathippakam.Chennai, First Edision. August-2005.*

17. *Jaisankar,R. (Vallalar Paadalkalil Maanuda Neyam) Thamizl mozhi matrum Ilakkiya,Pannattu Aaivithazl, Volume-5, No.2. January-2023.*

18. *Jayapunithavalli, V. (Agathil aram) Klanchiyam Sarvathesa Thamizl Aaivu Ithazl, Volume-4. No.2, May-2025.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2025, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com